செ.வெ.எண்: 688 நாள்: 15.10.2019

**புதிய ஆக்கபூர்வமான கண்டுபிடிப்புகளை உருவாக்குபவர்களாக மாணவர்கள் திகழ வேண்டும்.**

**மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியை துவக்கி வைத்து**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை திருஇருதய மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்தின் சார்பில் வருவாய் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.10.2019) துவக்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

முன்னாள் ஜனாதிபதி டாக்டர்.அப்துல்கலாம் அவர்களின் பிறந்த தினமான இன்று பள்ளி மாணவர்களுக்கான அறிவியியல் கண்காட்சி நடைபெறுவது பெருமைக்குறிய ஒன்றாகும். குறிப்பாக பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களிடையே அறிவியல் ஆர்வத்தை ஊக்குவித்து திறன்களை வெளிக்கொண்டுவரவும், தலைமைப் பண்பு, குழு மனப்பான்மை, அறிவியல் சார்ந்த ஆரோக்கியமான கலந்துரையாடல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாணவ பருவத்திலேயே புதிய தொழில்நுட்பத்தினை ஆராய்ந்து கையாள தெரிந்து கொள்ளவும் அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் நவீன இந்தியாவின் உருவாக்கத்தில் மாணவர்களின் பங்கை ஊக்குவிக்கவும் இதுபோன்ற அறிவியல் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி அளவில் நடத்தப்பட்ட கண்காட்சியில் தேர்வு செய்யப்பட்ட படைப்புகள் கல்வி மாவட்ட அளவில் நடத்தி முடிக்கப்பட்டும், அதில் தேர்வான மாணவர்களின் படைப்புகளே இன்றைய வருவாய் மாவட்ட அளவிலான போட்டிகளில் காட்சியாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த அறிவியல் கண்காட்சியில் கணிதம், நகரும் பொருட்கள், உணவு, புதிய கண்டுபிடிப்பு முயற்சிகள் உள்ளிட்ட எட்டு தலைப்புகளில் மாணவர்களின் அறிவியல் படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதுடன் புதுக்கோட்டை, அறந்தாங்கி, இலுப்பூர் ஆகிய கல்வி மாவட்டங்களை சேர்ந்த 28 பள்ளிகளின் 84 படைப்புகளும், 13 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளை சேர்ந்த 13 படைப்புகளும் என மொத்தம் 97 அறிவியல் படைப்புகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 8 தலைப்புகளில் ஒவ்வொரு தலைப்புகளிலிருந்தும் முதல் மூன்று நபர்பள் தேர்வு செய்யப்பட்டு காசோலை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. எனவே பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இதுபோன்ற அறிவியல் கண்காட்சிகளில் கலந்து கொண்டு தங்களது புதிய அறிவியல் படைப்புகளை காட்சிப்படுத்தி அறிவுத்திறனை மேம்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி.விஜயலெட்சுமி, மாவட்ட கல்வி அலுவலர்கள், திருஇருதய மகளிர் மேல்நிலைப்பள்ளி தாளாளர் சூசையம்மா, தலைமையாசிரியர் ஜோஸ்பின்மேரி, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**